சிவமயம்
திருச்செந்திலாண்டவன் துணை

373

மலர் 28 | பிங்களஹு ஆவணி இதழ் 1உ [17—8—'77] | இதழ் 8

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.
திருச்சிற்றம்பலம்

திருவுந்தியார் - உரை விளக்கம்

சிவஸ்ரீ, தத்புருஷ தேசிகரவர்கள்
தேவகோட்டை

[முன் தொடர்ச்சி]

பொற்கொழுக் கொண்டு வரகுக் குழுவதென்
அக்கொழு நீயறிந் துந்தீபற
அறிந்தறி யாவண்ணம் உந்தீபற. (38)

பொன்னாலே செய்த கலப்பைக் கொழுவைக் கொண்டு, புன்செய்த்தானியமாகிய வரகு விளையும் நிலத்தை உழுவதனால் என்ன பயன்? அந்தக் கொழுவின் சிறப்பை ஒருவாறு ஒத்த, குருவருளின் உயர்வை நீ அறிந்து. பிழையே பெருக்கிப் பிறப்பு இறப்புக்களில் செலுத்துகின்ற இந்திரிய விடயங்களில் அழுந்தாமல், உள்செயலற நீ அதுவாய் உணராதே உணர்ந்து நிற்பாயாக.

கலப்பையிலுள்ள கொழுவை, விலைமதிப்புடைய பொன்னினால் யாரும் செய்வதில்லை. அங்ஙனம் ஒரு கொழு செய்யப் பெற்றிருக்குமானால், அதைப் பேணி பாதுகாக்கும் பொருளாக வைத்திருப்பார்களேயன்றி, அதைக் கொண்டு நிலத்தை ஒருவரும் உழமாட்டார்கள். அதிலும் புன்செய்த் தானியமாகவும், ஏழை மக்களின் உணவாகவும், விலைமதிப்பிற் குறைவுடையதாகவும் உள்ள வரகு விளையும் நிலத்தில் அப்பொற்கொழுவைக் கொண்டு உழ, ஒருவரும் துணியமாட்டார்கள். ஒருவாறு அதனை நிலத்திற் செலுத்தி உழுதால், பொன் தேய்ந்து மதிப்பற்று வீணாகும். நிலமும் உழவுப் பயனை பெறாது. மதிப்புக் குறைவுடைய வரகுக்காக, வறண்ட புன்செய் நிலத்தில், பொற்கொழுக் கொண்டு ஒருவன் உழ முற்பட்டால், அவனது அறியாமையை அறிந்து அனைவரும் அவனை இகழ்வர். உழவாற் கிடைக்கத்தக்க பயன்கெட்டுப் பொருளிழப்பு உண்டாகும்.

அருளாசிரியரது நல்லருளால் கிடைத்த ஞானம், பெருமதிப்புடையது: அநாதி காலத்துக் கேவலநிலையிலும், பின்னர் வந்த சகலநிலையிலும் உயிர், தன்னுணைப் அறிய மாட்டாது குருடாய்க் கிடந்தது. கருணைக் கடலாகிய ஞானதேசிகர், உயிருண்மையைப் பல்லாற்றானும் தெரித் துணர்த்தி, எத்தனையும் எளிய உயிரை, எத்தனையும் அரிய தானும் ஒண்ணம் செய்தளிந்த பெரியதோரு தவினைய எதற்கும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. எது எதைப்பற்றினாலும் அதுவதுவாகி நிற்கும் உயிருக்குத் தன்னை அறிந்த வழி, எண் குணங்களால் நிறைந்த தன் வண்ணமாம்படி செய்கின்ற குரு உபகாரத்தை விடப், பெரிய உபகாரம் எங்கும் என்றும் இல்லை.

குரு, லிங்க, சங்கம வழிபாடொன்றே, பிறவிப் பிணியைப் போக்கும் பெருமருந்தாய் இருப்பது. குருவைச் சிவாலயங்களும் சிவனடியார்களுமென்று துணிந்து வழிபடுவோர், அம்மூவகை வழிபாடுகளையும் ஒருங்கே செய்தவராவார். மந்திரங்களாலும், மருந்துகளா லும், மேலான யோகத்தாலும், மணியாகிய இரதகுளிகை யினாலும், சாத்திரங்கள் கூறுகின்ற பிறவற்றாலும் கிடைக் கத்தக்க கலைஞானமும், மூன்று காலங்களையும் அறியும் ஞானமும், அணிமா முதலிய அட்டசித்தி ஞானமும், ஆகிய எல்லாம், ஞானசிரியரது உதவியின்றியே நாம் பெறுதற்குரியனவாயிருப்பன. சிவபெருமானது திரு வடியை அடைவிக்கும் ஞானம், ஞானசிரியனது நல்லரு ளால் வந்து கூடுவதன்றி வேறெவற்றானும் கூடாது. குரு வருளிருந்தால், முன்னே சொல்லிய ஞானங்களெல்லாம்

எளிதில் வந்து கூடும். ஞானகுரு சித்திகளை எதிர்பார்ப்பதில்லை. சித்திகள் ஞானகுருவை எதிர்பார்த்திருக்கும், இன்றியமையாத வேளைகளில். தம்மை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சித்திகளைத், தற்போத முனைப்பின்றித் திருவருள் வையிட்டு, ஞானகுரவர் பயன்படுத்துவார். திருஞானசம்பந்தராகிய ஞானசாரியரிடத்து நிகழ்ந்த சித்திகளனைத்தும், இங்ஙனம் திருவருளை முன்னிட்டு நிகழ்ந்தனவேயாமென்பது, உணரத்தக்கதாகும். குருவழிபாடே சிவ வழிபாடென்று ஞான நூல்கள் கூறும் உண்மையை உணர்ந்தவர்களுக்குக், குருவருளின் சிறப்பு நன்கு புலப்படும்.

உயிர்களுக்கு மூலகன்மத்தால் வந்த முதற்பிறப்பைத் தொடர்ந்து ஆகாமிய கன்மம் மேலும் மேலும் பிறப்பு இறப்புக்களை உண்டாக்கிக் கொண்டிருக்கின்றது. முன்னைப் பிறவிகளில் செய்யப்பட்டுக் கிடந்த இருவினைகளின் பயனாக, இப்பிறவியில் இன்ப துன்ப அநுபவம் உண்டாகின்றது. அவ்வநுபவம் மேல் வினையை உண்டாக்குகின்றது. அதனால் மீண்டும் மீண்டும் பிறப்பு இறப்புகளிற்படுதலும், சுவர்க்க நரகங்களில் சென்று மீளுதலும் கூடும். நல்வினை, தீவினைகளுக்கு மூலமாக இருப்பன. விருப்பு வெறுப்புக்கள். அவ்விருப்பு, வெறுப்புக்குரிய விடயங்களை, உயிர்கள் இந்திரியங்களைக் கருவிகளாகக் கொண்டு அநுபவிக்கின்றன. இந்திரிய நிக்கிரகம் உள்ளவனுக்கு விருப்பு, வெறுப்புக்கள் அடங்குதலும். வினையேருமையும் கூடும்.

இந்திரியங்கள், அவற்றிற்கு மேற்பட்ட தத்துவமாகிய மனத்தால் செலுத்தப்பட வேண்டும். அங்ஙனமின்றிக் கீழ்நிலையிலுள்ள இந்திரியங்களின் வழியே, மனம் செல்லுவதனாலேயே, பிறப்பு, இறப்புக்கள் 'உயிர்களுக்குத்

தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. அடக்குதற்கரிதாகிய ஆற்றலுடைமைபற்றி, இந்திரியங்களையானையோடு ஒப்புக் கூறுவர் ஆன்றோர். "தொண்டர் அஞ்சுகளிறும் மடக்கி" என்பது, ஆளுடைய பிள்ளையார் திருவாக்கு. "பொறிவாயில் ஐந்துவித்தான்" என்னும் திருக்குறள், "வென்றுளே புலன்கள் ஐந்தார்" என்னும் திருவிளையாடற் புராணமாதியவை, இந்திரிய நிக்கிரகத்தின் இன்றியமையாமையை வலியுறுத்துவனவாகும்.

கண்காள் காண்மின்களோ, செவிகாள் கேண்மின்களோ, மூக்கே நீ முரலாய், வாயே வாழ்த்து கண்டாய், ஆக்கையால் பயனென்" என்பன முதலாக, ஆளுடைய அரசுகள், அடக்க முடியாத பொறிகளை மடக்கிப் பயன் பெறுவதற்கு வழியருளுகின்றார். பிழையே பெருக்கிப் பிறப்பு, இறப்புக்களில் அழுந்தித் துன்புறுவது தவிர்க்கப் படல் வேண்டும். இதற்கேற்ற ஒரே உபாயம் ஞானதேசிகனது அருள்வழி நிற்றலேயாம். தற்போதம் கெடுவதற்கு இதுவே முதற்சாதனமாகி உதவும்.

முன்பெல்லாம் தோன்றாத் துணையாயிருந்து உபகரித்து வந்த திருவருள், பின்பு தோன்றுந் துணையாகி நின்று உபகரிப்பதை உணருதல் வேண்டும். உண்மை ஞானிகள், பூரண இன்ப அநுபவம்பெற்று விளங்குவதால், உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் பித்திகை வடிவம் காண்பார்க்குச் சித்திரம் இல்லையானது போலச், சிவசக்தி சொருபமாகவே காண்பார்கள். "திருவளர் நாட்டம் கருணையிற் பெறலும், யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி, மேவரும் நீயே மெய்யெனத்

தோன்றினை'' என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு. தாமும் சிவமாக இருப்பதன்றிச், சிவத்தைத் தம்மின் வேருகச் சுட்டுணர்வால் உணர்தலும், உணர்ந்த வழிச் சென்று புணர்தலும் சிவஞானியருக்கில்லை எல்லாப் பொருள்களையும், சிவசக்தி சொரூபமாகக் காண்பதை விட்டுத், தற்போத மூனைப்பினுலே காண்பது, பொற் கொழூக் கொண்டு வரகுக் குழூவதாகவே முடியும்.

(தொடரும்)

சேக்கிழாரும் சேயிழையார்களும்

மதுரை ஆதீனம் சிஷ்யை
செல்வி: த. பத்மாவதி அவர்கள்,
மதுரை.

மெய்ப்பொருள் நாயனர் மனைவியார்:

சென்ற இதழில் இளையான்குடி மாறநாயனரின் மனைவியாரைப் பற்றிச் சிந்தித்தோம். இவ்விதழில் மெய்ப் பொருள் நாயனரின் மனைவியாரை வந்திப்போம்.

வள்ளுவ தேவநாயனர் மெய்யுணர்தல் என்று ஒரு தனி அதிகாரமே வகுத்து மெய்பொருளை உணரவேண்டிய அவசியத்தை உணர்த்துகிறர். சிவஞானமே உலகில் மெய்ப்பொருளாகும். பற்றற்ருன் பற்றினைப் பற்றியவர்க்கே அந்த சிவஞானம் சித்திக்கும். ஆதலின் இவ்வதிகாரத் தைத் துறவு அதிகாரத்தின் பின் வைத்தார்.

உலகில் பொருளல்லாத பொருளைப் பொருளாக உணர்ந்தால் அதனல் பிறப்பு இறப்புகளிற்பட்டு அல்லற் பட நேரிடும் என்பதை வள்ளுவர்,

பொருளல்லவற்றைப் பொருளென்று உணரும்
மருளானும் மாணுப் பிறப்பு.

என்று குறிப்பிடுகிருர். பல பிறவிகளில் இடர்பட்டுக் கடைசியில் தெய்வம் எனபதோர் சித்தம் உண்டாகி அதன்பின் மெய்ப் பொருளாம் இறைவனை உயிர்கள் பற்றுகின்றன.

மெய்ப் பொருளே என்றும் நிலைத்துள்ள பொருள். பொய்ப் பொருள் இன்று இருந்து நாளை அழியும். அதனை அறியாது மயங்கிப் பொய்ப்பொருளை மெய்ப்பொருள் என்று நம்பும் மாந்தர் அறிவுடையவர் ஆகார். அதனுலேயே,

"நில்லாதவற்றை நிலையின என்றுணரும்
புல்லறிவாண்மை கடை"

என்றருளினுர் வள்ளுவரும். அழிகின்ற பொய்ப்பொருளைப் பொருளாகக் கொள்ளாத நல்லறிவு பெற்று விளங்கினுர் மெய்ப்பொருள் நாயனுர். மெய்ப் பொருளாம் சிவபெருமானை நினைவூட்டுவதும், சிவபெருமானே அணிந்ததும் ஆகிய திருநீறும், கண்டிகையும் புனைந்த சிவவேடத்தையே மெய்ப் பொருளாகக் கொண்டு வாழ்ந்தார் அவர்.

அவர் தம் மனைவியாரோ சிவபக்தியிற் சிறந்து கணவனுர் கருத்தறிந்து ஒழுகும் பண்புடையவராயிருந்தார். கணவனுருக்குப் பின்தூங்கி முன்எழும் பதிவிரதையாகவும் விளங்கினுர். "மால்அற நேயம் மலிந்தவர் வேடமும் ஆலயம்தானும் அரனெனத் தொழுமே" என்பது சிவஞான போதச் சூத்திரம். அதற்கு இலக்கியமாகத் திகழ்ந்த அவரும், அவர் தம் மனைவியாரும் திருக்கோவலூரைத் தங்கள் தலைநகரமாகக் கொண்டு அரசாட்சி செலுத்தி வந்தனர்.

தேடிய மாடும் வீடும் செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்கு ஆவன ஆகும் என்று

நாடிய மனத்திஞேடு நாயன்மார் அணைந்தபோது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்.

இங்ஙனம் இல்லற இயல்பினுக்குச் சற்றும்மாருது சிவ வேடத்தையும் பணிந்து சிவனடியார்க்கும் ஈந்து அரசாண்டு வருங்காலத்தில் முத்தநாதன் அவரிடம்பல முறைப் போரிட்டுத் தோற்று ஓடினுன். வேறு வழியின்றி வஞ்சனையால் வெல்லக் கருதினுன். சிவனடியாரிடத்து அன்பு பூண்ட மெய்ப்பொருள் நாயனுரை வெல்லச் சிவனடியார் போலவே வேடம் பூண்டான். மேனி முழுவதும் திருநீறு பூசினுன். கையில் படையை மறைத்துப் புத்தகம் போல் ஆக்கினுன்.

ஒருநாள் இரவு இவ்வஞ்சனை வேடத்துடன் அரண்மனைக்குள் நுழைந்தான். திருவேடத்தைப் பணியும் மன்னவருடைய பழக்கத்திலேயே இருந்தகாவலாளர்கள், எல்லோரும் அவனது வேடத்தைக் கண்டு உள்ளே விடுத்தனர். அவன் பலவாயில்களையும் கடந்து கடைசியில் உள்வாயிலை அடைந்தான். அவிடம் தத்தன் என்ற கூர்த்த மதியுடைய, குறிப்புணர்வதில் வல்ல காவலன் இருந்தான். பொய்மை வேடம் பூண்டுவரும் புல்லனை நல்லனல்லன் என்று குறிப்பாலுணர்ந்து "சுவாமி அரசர் பெருமான் துயில் கொண்டிருக்கிருர். அவர் உங்களை வரவேற்கவும், தாங்கள் அவருக்கு அருள்புரியவும் இது ஏற்ற சமயமன்று சமயமறிந்து மன்னரிடம் செல்ல வேண்டும்" என்று மிகவும் சாதுர்யமாகத் தடுத்துரைத்தான்.

வஞ்ச மனத்தனாகிய முத்தநாதன், நான் அரசருக்குத் தருமத்தைச் சொல்லி உறுதியுரைக்க வந்துள்ளேன். நீ நில் என்று கடிந்துரைத்து விட்டு உள்ளே நுழைந்து விட்டான். அரசன் பொன்னாலான கட்டிலில் துயின்று கொண்டிருந்தார். அரசமாதேவி அருகில் அவருடைய பாதங்களை வருடிக் கொண்டிருந்தாள். முத்தநாதனைக் கண்டதும் எழுந்து கணவரை எழுப்பினாள். மெய்ப் பொருள் நாயனார் தொழுதபடியே எழுந்து வேடந்தாங்கிய முத்தநாதனை உபசரித்து வணங்கினார். அவன் உனக்கு உபதேசிக்க ஒரு சிவாகமம் கொண்டு வந்துள்ளேன் என்று கூறினான். அவன் கூறியதைக் கேட்ட அரசன் அடியேனுக்கு இதைவிடப் பெரியபேறு வேறு உண்டோ? என்று மகிழ்ந்து அதனை அடியேனுக்கு உபதேசித்தருள வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

அதற்கு முத்தநாதன் அதனை உபதேசிக்க "நாறு பூங் கோதை மாது தவிரவே நீயும் நானும் வேறிடத்திருக்க வேண்டும்" என்று வஞ்சனையால் கூறினான். முத்தநாதன் வந்துள்ளதால் அரசமாதேவி இனி மலர்சூடும் தன்மை தவிர்ந்துவிடப் போகிறார், என்பதும், கொல்ல வந்தவனையும் வேடங்கண்டு வணங்கும் மெய்ப் பொருள் நாயனார் சிவலோகத்திலும், வஞ்சனையால் கொலைத் தொழில்புரியும் முத்தநாதன் நரகத்திலுமாக வேறு இடங்கட்குப் போக வேண்டும் என்பதும் சிலேடைப் பொருளாகும்.

மகாலெக்ஷ்மி போல் அருகே நின்ற அரசமாதேவியை நாயனார் அன்புடன் நோக்கி பெண்ணே நான் சிவாகமம் கேட்கப் போகிறேன். நீ அந்தப்புரம் செல் என்று

பணித்தார். தேவியாரும் கணவனுரைத் தொழுது அவரது ஆணையின் வண்ணமே அந்தப்புரம் சென்ருர். மன்னவர் வணங்கும் போது வஞ்சகன்புத்தகம் அவிழ்ப்பான்போலப் படையை எடுத்து எண்ணியபடியே முடித்தான்.

சைத்ரலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்த அப்பரிசே செய்ய
மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள் எனத்தொழுது வென்ருர்.

என்று சேக்கிழார் பெருமான், "கொன்ருன்" என்று கூருமல் "நினைத்த அப்பரிசே செய்ய" என்று கூறுகிருர்.

கீழே வீழ்கின்ற அரசன் அந்த நேரத்திலும் மெய்த் தவ வேடமே மெய்ப்பொருள் என்று சொல்லி வீழ்ந்தார் வஞ்சமனத்தானை வாளினுல் எரியவந்த தத்தன் என்ற காவலாளனை, வீழ்ந்து கிடக்கின்ற நிலையிலும் அரசர் கையால் தடுத்துத் "தத்தா நமர்" என்றுகூறி இவருக்குத் தீங்கு நேராமல் கொண்டு போய்விடு என்று பணித்தார். அவ்வாறே விட்டுவருமளவும் தன் உயிரைத் தாங்கி இறைவனை நினைந்தவாறே சிவனடி சேர்ந்தார்.

இச்சரிதத்தில் அம்மையார் பங்கு நோக்கினுல், மன்னவன்துயின்ற பின்னரும் தேவியார் விழித்திருந்து நாயகனுக்குஉபசாரம் செய்தது அவரது கற்பு நிலையை விளக்குகிறது. திருவேடத்தைப் பணிந்து பழகிய பழக்கத் தால் அவ்வஞ்சனை வேடத்தானைக் கண்டதும் பள்ளியறை யிலுங்கூட அடியார் என்று இடத்தையும், காலத்தையும் அறியாதுமன்னனை எழுப்பினர். இச்செயல் அவரது அடியார் பக்தியை விளக்குகிறது.

———

[தொடரும்]

அருள்மொழி அமுது

56. உணவும், பணமும் தந்த உத்தமன்

[சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரம்— தொடர்ச்சி]

திரு. ஸ்ரீராமநாமப்பரதேசி அவர்கள்,

3119 – கீழ இரண்டாம் வீதி, புதுக்கோட்டை.

திருச்சிற்றம்பலம்

ஜகத்குரு ஸ்ரீஆதிசங்கராசாரியாள் சிவபெருமானை நோக்கி, "பெருமானே! உம்கையில் தங்கமயமான மேருவை வில்லாக வைத்திருக்கின்றீர்கள். உமக்குத் தங்கம் கொடுக்க யாராலாகும்? உலகத்தின் பெரிய பணக்காரனான குபேரனே உம்நண்பன். கற்பகவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி முதலானவைகள் உம திருப்பிடத்திலேயே உள்ளன. அபிஷேகப் பிரியராகிய உமது திருமுடியில் குளிர்ச்சி பொருந்திய கங்கைஉள்ளது. சகலமங்களங்களும் உமது திருவடியிலேயே உள்ளன. என்னிடம் உமக்குக் கொடுக்க என்ன இருக்கிறது? என் மனத்தையே உமக்கு அளிக்கிறேன்" எனத் தமது சிவானந்தலகரியில் கூறினார்.

பொற்சிலை கைச்சிலையருகே தனபதிநின் திருவாசற் பொருந்தும் தேவ
நற்றருக்கள் சுரபிசிந்தா மணிமுடிமேல் நளிர்மதிய நன்மைக் கெல்லாம்
இற்பொலியும் திருவடிக ளெனிற்கயிலைக் கிரீசயன ஏழை நாயேன்
நிற்களிப்ப தெவனிந்த நெஞ்சமே உனக்களிக்க நேர்ந்த தாமே.

ஸ்ரீஆதி சங்கரரின் சிவானந்தலகரி
தமிழாக்கம்: கோவை மகாவித்துவான்
நடேசக்கவுண்டர் அவர்கள்,

எனவே இறைவனுக்கு யாரும் எதுமேயளிக்க முடியாது. ஸ்ரீசிவப்ரகாசர் தனது நால்வர் நான்மணி மாலையில் "பணக்கார நண்பனுகக் குபேரனையும் படித்தவொரு நண்பனுக சுந்தரமூர்த்திகளையும் இறைவன் கொண்டார்.

அறிந்து செல்வமுடையானு மளகைப் பதியார் ரேழமை கொண்டு
உறழ்ந்த கல்வியுடையர்னு மொருவன் வேண்டுமென் விருந்து
துறந்தமுனிவர் தொழும்பரவை துணைவா? நினைத்தோழமைகொண்டான்
சிறந்தவறிவு வடிவமாய்த் திகழும் நுதற்கட் பெருமானே.

என்றுர். குபேரனைக் கொண்டு இளையான்குடிமாற நாயனுருக்கு ஏவல் செய்யக் கூறினுர் என ஏற்கனவே கூறினுர் அருள்மொழித் தேவர்.

அள்ள அள்ளக் குறையாத அமுதமான இறைவன் சுந்தரமூர்த்தி நாயனுருக்கு நெல்மலையும், பொன்மலையும் கொடுத்தார். சிவனை நினைந்தவர்எவர் தாழ்ந்தார் சதா சிவனை மறந்தவர் எவர் வாழ்ந்தார் என்பது ஆன்றேரின் வாக்கு.

பரவை நாச்சியாரைத் திருமணம் செய்து கொண்டு திருத்தொண்டத் தொகை பாடிய சுந்தரமூர்த்தி நாயனுர். ஆரூர் இறைவனை பிரியாது, பாவை நாச்சியாரையும் பிரியாது திருவாரூரிலேயே தங்கினர். சுந்தரர் மீதில் அன்பும், பக்தியும் கொண்ட குண்டையூர்கிழார் என்ற ஒருவர் சுந்தரருக்கு வேண்டிய அமுதுபடி உதவி வந்தார். விளைச்சல் குறைந்ததால் குண்டையூர்க் கிழார் அமுதுபடி அளிக்க முடியாது. அந்த வருத்தத்தினுல், தானும் உணவு

உண்ணாது உறங்கினார். கனவில் கருணாமூர்த்தியான இறைவன் தோன்றி "ஆரூரனுக்காக உனக்கு நெல் அளிக்கிறோம்" எனக் கூறினார். இறைவனின் கட்டளையால் குபேரன் குண்டையூர் பூராவும் நெல்லாகவே பரப்பினான். பொழுதுவிடிந்து எழுந்த குண்டையூர்க் கிழார், ஊர்பூராவும் நெல்மலை கண்டு அதிசயித்து, சுந்தரர் தாள்பணிந்து அவரைக் காணப் புறப்பட்டார். இதேமாதிரி சனுக்கண்ட சுந்தரரும் குண்டையூர் வந்தனர். இந்த நெல்மலையை திருவாரூர் எடுத்துச் செல்லவேணும். இது நம்மால்முடியாதென்று, திருக்கோளிலி என்னும் பக்கத்திலுள்ள திருக்கோயிலையடைந்து,

திருச்சிற்றம்பலம்

நீளநினைந் தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடிவருந்தாமே
கோளிலியெம் பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்
ஆளிலை யெம்பெருமான் அவைஅட்டித்தரப் பணியே.

திருச்சிற்றம்பலம்

எனப்பதிகம் பாடினர். குண்டையூர் பூராவும் நெல் நிரம்பியிருந்ததால் உள்ளே செல்ல முடியாது அருகிலுள்ள திருக்கோளிலி என்ற தலத்துள் சென்று இறைவனைத் தொழுதனர் என்பது குறிப்பு. இறைவன் "பகலில் மக்கள் அஞ்சுவார்கள். ஆதலால் இரவில் நமது சிவகணங்களான பூதங்கள் நெல் அனைத்தையும் திருவாரூரில் சேர்த்துவிடும்' என்றனர்.

மறுதினம் காலையில் அனைவரும் எழுந்து திருவாரூர் பூராவும் நெல் மலையாகவே நிரம்பியிருக்கக் கண்டு அதிசயித்தனர். "அவரவர் வீட்டு வாசலிலுள்ள நெல்குவியலை

அவரவர்கள் தம்தம் மனைகளுக்குள் எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளுக" எனப் பறைபறைவித்தார் பரவையார். மக்கள் அவ்வாறே எடுத்துக் கொண்டு மகிழ்ந்தனர்.

சுந்தரர் சின்னுட்களுக்குப் பின் பல தலங்களை தரிசித்து திருநாட்டியத்தான் குடிவந்தனர். அங்கு சுந்தரரை எதிர்கொண்டழைத்த கோட்புலி நாயனர் வேண்டிய பூசனைகளைச் செய்து தமது மக்களாகிய சிங்கடியார் வனப்பகையார் இருவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். சுந்தரமூர்த்திகள் அவ்விருவரையும் உச்சிமோந்து தமது மக்களாக ஏற்றுக் கொண்டனர். திருநாட்டியத்தான்குடியில் இறைவன் சுந்தரருக்கு பாம்பு முதலான அஞ்சத்தக்க அடையாளங்களுடன் காட்சி தந்தனர். அதுகண்டு அஞ்சாத சுந்தரமூர்த்திகள் திருநாட்டியத்தான் குடி இறைவர் மீது பதிகம்பாடி, அதில் கோட்புலியாரையும் வைத்து சிறப்பித்துத் தம்மையும் "சிங்கடியப் பனின்" தந்தை என வைத்துப் பாடினர்.

திருச்சிற்றம்பலம்

பூணாவ தோரரவங் கண்டஞ்சேன் புறங்காட் டாடல்கண் டிகழேன்
பேணீ ராகிலும் பெருமையை யுணர்வேன் பிறவே னாகிலு மறவேன்
காணீ ராகிலும் காண்பனென் மனத்தாற் கருதீ ராகிலுங் கருதி
நானேலும் மடி பாடுத லொழியே னாட்டியத் தான்குடி நம்பி.

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற கொடிறன் கோட்புலி சென்னி
நாடார் தொல்புகழ் நாட்டியத் தான்குடி நம்பியை நாளு மறவாச்
சேடார் பூங்குழற் சிங்கடியப்பன் திருவாரூ ரனுரைத்த
பாடீ ராகிலும் பாடுமின் தொண்டீர் பாடநும் பாவம்பற் றறுமே.

திருச்சிற்றம்பலம்

அங்கிருந்து திருவலிவலம் என்ற தலம் சென்ருர். இறைவனை "நன்று மகிழும் சம்பந்தர் நாவுக்கரசர் பாட்டுகந்தீர்" என்று பரவிப் பாடினுர். மூவரும் பாடிய தலங்களில் ஒன்று திருவலிவலம் என்பது அறியத் தக்கது

திருவாரூரிலே மீண்டும் சிறிதுநாள் தங்கிய சுந்தரர் பங்குனி உத்திர திருநாளில் பரவை நாச்சியர் அடியார்களுக்கு அளிப்பதற்கும் பொருள் விரும்புவாரே என எண்ணி, பொருள் வேண்டுவதற்காகத் திருப்புகலூர் சேர்ந்தார். உலகநாயகரான ஆரூர்த் தியாகராஜாவிடம் பொருள் பெறக் கூடாதா என்ருல் தனது ஆன்மார்த்த நாயகரான ஆரூப் பெருமானிடம் பொன் முதலான காமியப்பயன்களை வேண்டலாகாது என்ற சிவாகமவிதியாலும், ஆன்மார்த்த மூர்த்தியிடம் நம்மிடமிருப்பதை அர்ப்பணம் செய்ய வேண்டுமே தவிர அங்க ஏற்கக் கூடாது என்ற பூசாவிதியின் காரணமாகவும் திருவாரூர்ப் பெருமானை வேண்டாது திருப்புகலூர்சென்ருர் என்று கூறுகிருர் உரையாசிரியராகிய எமது கொங்குநாடு தந்த ஸ்ரீலஸ்ரீ சம்பந்த சாணுலய மகா சன்னிதானம் அவர்கள்,

திருப்புகலூரிலே உழவாரத் திருப்பணி செய்யும் போது அப்பர் பெருமானுக்கு தங்கம் வைரம் முதலானவை கிடைத்தன, அவற்றை அவர் "ஓடும் பொன்னும் ஒக்க நோக்கம் காரணமாக" தூக்கி யெறிந்தார். திருப்புகலூரில் நிறையச்செல்வமிருக்கலாம். திருவாவடுதுறையில்இறைவன் சம்பந்தப் பெருமானுக்கு ஆயிரம் பொன்னே அளித்தார். சுந்தரமூர்த்தி களுக்கு நிறையப் பொன் தேவை. எனவே நிறையக் கிடைக்கக்கூடிய திருப்புகலூர் சேர்ந்தார் எனத் தோன்றுகிறது.

புகலூர்ப் பெருமான் திருமுன்னர் பதிகம்பாடி, திருக் கோயில் முன் மண்டபத்தில் தங்கினுர். இறைவனது அருளால் அவருக்குத் திடீரெனத் தூக்கம் வந்தது. பக்கத்திலிருந்து செங்கற்களை எடுத்துத் தலையணைக்குப் பதிலாக வைத்து அதன்மீது துண்டைவிரித்து உறங்கினுர். விழித்து எழுந்தபோது செங்கற்கள் பொன் கற்களானது கண்டு அதிசயித்து மகிழ்ந்தார்,

"புலவர்களே! மனிதர்களைப் பாடாதீர்கள். இம்மை மறுமைப் பலன்கள் யாவும் கிடைக்கும்" எனப் பாடினுர்.

திருச்சிற்றம்பலம்

தம்மையே புகழ்ந்திச்சை பேசினும் சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவர்காள்
இம்மையேதரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையே சிவலோகமாள் வதற்கியாது மையுற வில்லையே.

திருச்சிற்றம்பலம்

இந்த சம்பவத்தை அருட்பிரகாச வள்ளலார் தமது அருட்பாவில் "கல்லைப் பொன்னுக்கிய கருணையாள! உன் கருணையை மனத்தில் வையாது புல்லையே பொன்னுக எண்ணும் புலையரிடம் பொன்னளிக்க வல்லோனே எனப் பாடுகிருர்களே! என்ன பரிதாபம்" என்று பாடுகிருர்.

வில்லைப்பொன்னுக் கரங்கொண்டோய்! வன்ருெண்டர் விரும்புறச்செங்
கல்லைப் பொன்னுக்கிக் கொடுத்தோய்? நின்பாதம் கருத்தில் வையார்
புல்லைப் பொன்னுகக் கொள்ளும் புல்லர்கள் பாற்சென்று பொன்னளிக்க
வல்லைப் பொன்னுர் புயஎன்பார் இதென் சொல்வாணர்களே

— அருட்பா-திருவருள் முறையீடு 147.

பின்னர் திருப்பனையூர் சென்ருர். இறைவர்கூத்தாடும் காட்சி கிடைக்கப் பெற்று மகிழ்ந்தார். பல தலங்களை தரிசித்துச் செல்லுங்கால் "மழபாடியில் வருவதற்கு நினைக்

கமறந்தனையோ?'' என இறைவர் கேட்டு, உலகத்தில் பிரபலமான ''பொன்னார் மேனியனே'' ப்பதிகம் பாடினார். திருப்பாச்சிலாச் சிரமத்தில் இவரது பாடல் கேட்கவிரும்பிய இறைவர் பொன்னளிக்காது சிறிது தாமதிக்க, நொந்து போன நாயனார் 'இவரல்லா தில்லையோ பிரானார்' எனப் பதிகம் பாட இறைவன் பொருள் தந்தனர். பின் திருப் பைஞ்ஞீலி முதலான தொழுது கொடுமுடியடைந்து ''நற்றவா உன்னை நான்மறக்கினும் சொல்லும் நாநமச் சிவாயவே'' எனக் கொடுமுடிப் பதிகம் பாடிப் பேரூர டைந்தனர். நடரார்ஜர் திருக்கோலம் காட்சி கிடைத்தது. கற்குடி முதலான தலங்கள் கடந்து திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலம் நோக்கி வரும்போது இறைவர் ஒரு வேதியராகி வந்தனர். ''திருமுதுகுன்றத்திற்கு வழி கேட்க, கூடலையாற்றூருக்கு வழிகாட்டி வேதியராக வந்த இறைவர் மறைந்தனர். ''வடிவுடை மழுவேந்தி'' எனப் பதிகம் பாடி திருமுதுகுன்றம் சேர்ந்தார் சுந்தரர். இறைவன் சுந்தரருக்கு இத்தலத்தில் பன்னிரண்டாயிரம் பவுன் தந்தனர். இந்தப் பொன் முழுதும் உலகறியத் திருவாரூர் வந்துசேர வேணுமென்று வேண்டினர். ''இவ்வூரிலுள்ள மணிமுத்தாற்றிலிட்டு, திருவாரூர் குளத்தில் எடுத்துக் கொள்க'' என்றார் இறைவர்.

அருளுமிக்கனக மெல்லா மடியனேற் காருருள்ளார்
மருளுற வியப்பவங்கே வரப்பெற வேண்டு 'மென்னத்
தெருளுற வெழுந்த வாக்காற்'' செழுமணி முத்தாற்றிட்டுப்
பொருளினை முழுதுமாரூர்க் குளத்திற் போய்க் கொள்க'' வென்றார்.

சுந்தரர் சிறிது மச்சம் வெட்டியெடுத்துக் கொண்டு பாக்கியை மணிமுத்தாற்றிலிட்டு, சிதம்பரம் சென்றார். தில்லை தரிசித்துத் திருவாரூர் சென்றடைந்தார்.

பரவை நாச்சியாரை அழைத்து வந்து, மணிமுத்தாற்றிலிட்ட பவுன்பூராவும் திருவாரூர்க் குளத்தில்அளிக்குமாறு வேண்டினுர். இறைவன் இவரது பாட்டின் மீது ஆசை கொண்டு சிறிது தாமதிக்க, "ஆற்றினில் இட்டுக் குளத்தினில் தேடுகிறீர்களே" எனப் பரவையார் கூற "பரவை என்னைப் பரிகசித்துச் சிரிக்கா வண்ணம் பொன்னைத் தருக" என்ற வேண்டுகோளுடன்,

திருச்சிற்றம்பலம்

ஏத்தா திருந்தறியேன் இமையோர் தனிநாயகனே!
மூத்தாயுலகுக் கெல்லாம் முதுகுன்றமர்ந் தவனே:
பூத்தாருங் குழலாள் பரவையிவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய் கொடியேனிட்டளம் கெடவே.

திருச்சிற்றம்பலம்

எனத் தேவாரம் பாட, பொன் தோன்றியது. மாற்றுரைத்துப் பார்க்கச் சிறிது மாற்றுக் குறைந்தது. மீண்டும் பரவித் தொழ மாற்றைச் சரிசெய்து காட்டினுர் இறைவர்.

பின்னர் திருநள்ளாறு திருக்களவூர் முதலான பதிகளைத் தரிசித்து திருநின்றியூரில் திருநாவுக்கரசர் ஏழெழு நூல் இரும்பனுபவல் பாடியதாகச் சிறப்பித்து வணங்கினுர்: நாவுக்கரசர் 4900-பாடல்கள் பாடியதாகச் சுந்தரர் கூறுகிறுர். நம்பியாண்டர் நம்பிகள் திருஞானசம்பந்தர் "பன்னுதமிழ்ப் பதினுயிர நற்பனுவல்" "பச்சைப் பதிகம் பதினுயிரம்" பாடியதாக அருளிச் செய்துள்ளார். அத்தனை பாடல்களும் இன்று இல்லை. கிடைத்தவற்றை பத்திரமாக வைத்துக் கொள்ள இறைவனை வேண்டுவோமாக! திருக்கோலக்காவில் சுந்தரருக்கு இறைவனது காட்சி கிடைத்தது.

திருச்சிற்றம்பலம்

நாளுமின்னிசையால் தமிழ்பரப்புஞ்ஞானசம்பந்தனுக்கு உலகத்தவர்முன்
தாளமீந்தவன் பாடலுக்கிரங்கும் தன்மையாளனை யென்மனக்கருத்தை
ஆளும் பூதங்கள் பாட நின்றுடும் அங்கணன்றனை யென்கணமிறைஞ்சும்
கோளிலிப்பெருங்கோயிலுளானைக்கோலக்காவினிற் கண்டுகொண்டேனே

திருச்சிற்றம்பலம்

என திருஞானசம்பந்தருக்குத் தாளம் கொடுத்தருளியமையை வியந்து பாடினர்.

திருக்கோலக்காவிலிருந்து திருக்குருகாவூர் என்ற தலத்தையடைந்த காலத்தில் பசி தாகத்தினல் களைப் படைந்நார். இறைவன் அவரிடம் (பந்தர் முதலான அழைத்துக் கொண்டு)

ஆலநீழற் கீழிருந்தார் அவர்தம்மை எதிர்நோக்கிச்
சாலமிகப் பசித்தீர் இப்பொதிசோறு தருகின்றேன்
காலமினித் தாழாமே கைக்கொண்டிங் கினிதருந்தி
ஏலநறுங்குடி தண்ணீர் குடித்திளைப்புத் தீருமென.

இறைவன் அளித்த சோற்றையும் தண்ணீரையும் உட்கொண்ட நாயனர்களை நீங்கினர். இறைவன் தான் தோற்றுவித்த பந்தர் மூதலானவற்றோடு மறைந்தார். சுந்தரர் இதுகண்டு திடுக்கிட்டு உறுதி "இத்தனையாமாற்ற மறிந்திலேன்" எனப் பதிகம் எடுத்துப் பாடி "ஆவியைப பேசாமை தவிர்த் தென்னையாட் கொண்டாய்" என்றும் "பாடுவார் பசிதீர்ப்பாய்பரவுவார் பிணிகளைவாய்" என்றெல்லாம் ஏத்திப் புகழ்ந்தார். பின்னர் கழிப்பாலை, தில்லை முதலான தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருக்கச்சூர் வந்தனர். திருக்கச்சூரில் இறைவன் சுந்தரர் பசிதாகம் களைப்பால் வருந்த தானே சென்று வீடுதோறும் பிச்சை வேண்டி சுந்தரருக்கு அமுது படைத்தார். அவர் பிங்சையேற்று வந்த திருக்கோலத்தை,

> வெண்திருநீற்றணிதிகழ: விளங்குநூல் ஒளிதுளங்சக
> கண்டவர் மனம்உருக: கடும்பகற் போதிடும் பலிக்கும்
> புண்டரிகக் கழல்புவ மேல் பொருந்தமனை தொறும்புக்குப்
> கொண்டுதாம் விருப்பிஆட்கொண்டார் முன்கொடுவந்தார்,

எனக்கூறுகிறது. அருள்மொழித் தேவரின் அருட்கவிதை. இந்தச் செய்தியை,

> பைச்சூரரவப்பட நடத்தான். அயன் பற்பலநாள்
> எய்ச்சூர் தவம்செய்யினும் கிடையாப்பதம் பேய்ந்து மண்மேல்
> வைச்சூரன் வன்றெண்டன சிந்தரன் என் னுநம் வள்ளலுக்குத்
> கச்சூரிற் சோறிரந்தூட்டின ரெங்சடவுளாரே.

என்றுபாடி உருகிய ராமலிங்க சுவாமிகள்,

திருச்சூரிலிருந்து புறப்பட்டு திருக்காஞ்சியடைந்து வணங்கி திருவோணகாந்தன் தளியில் வந்து இறைவனிடம் பூசைக்காசப் பணம் வேண்டிப் பெற்றார்.

இந்தப்புராணத்தில் அடிக்கடி இறைவனிடம் நாயனார் அளவில்லாத பொருளாசையுடையவரோ. எனக்கூட அன்பர்கள் நினைக்கலாம். நம்மைப் போல உலகாதய காரியங்களுக்காக் பணம் கேட்டால் ஆசையுள்ளவர்கள் என்னலாம். திருவாதிரை நாட்களில் அடியார்கள் பூசை செய்வதற்காகவே செல்வத்தை வேண்டினார் நாயனார். திருவோணகாந்தன் தளியில் பணம் வேண்டுமென்ற போதுகூட பூசை செய்வதற்காக வேண்டினர் என்பதைக் காணலாம். எனவே நாயனாரோ பரவை நாச்சியாரோ பொருளாசையற்றவர்கள் என அறியலாம். திருவாரூர் பூராவும் நெல் மலையாக இருந்தபோது அவரவர் வீட்டு வாசலில் அவரவர் எடுத்துக் கொள்ளுக எனக்கூறிய

திலிருந்தே அவரது உண்மையான குணத்தையறியலாம். இப்படிக் கருணையாளர்களுக்காக பரவை நாச்சியாரும் சுந்தரரும் இருந்ததால் இறைவன் பிச்சையெடுத்தாவது நாடனுருக்கு உணவளித்தான் என்பதை கவனிக்க வேண்டும்.

குண்டையூரிலிருந்த நெல்மலைகள் திருவாரூருக்குக் கொணரப்பட்டன. நாகரீகம் என்ற பெயரால் தம்மைப் பெரிதாக எண்ணி, பழமையைச் சாடும் நல்லோர் சிலர் இதை நம்பமறுக்கலாம். ஒருவேளை பூதங்கள் நெல்மலை கொண்டுவந்தன என நம்பினுல்கூட, திருமுதுகுன்றத்தில் மணிமுத்தாற்றலிட்ட தங்கம் திருவாரூர் குளத்திலே வந்தன என்பதை ஒரேடியாகப் பொய்யென்றே சாதித்து விடுவர்.

நிலையாத பிறவியான மனிதன்எங்கேயோ பேசுவதை இங்கே கேட்பதற்கான டெலிபோன் கருவியையும், ரேடியோவையும் கண்டுபிடுத்திருக்கிறுன். எங்கேயோ நடப்பதைக் கான டெலிவிஷன் என்பதைக் கண்டுபிடித் துள்ளான். திடிரென்று செய்தியனுப்புவதற்குத் தந்திவசதி கண்டுபிடித்தான். நூறு வருடங்களுக்கு முன்னுல் டெலிபோன், ரேடியோ, தந்தி என்பதைப் பற்றிச் சொன்னுல்கூட கேலி செய்திருப்பார்கள். இன்ருே!

எங்கேயோ இருப்பதை கேட்கவும், பார்க்கவும் வசதி கண்டுபிடித்திருக்கும் போது எல்லாம் வல்ல இறைவன் ஓரிடத்தில் இருப்பதை மற்ருேரிடத்திற்குக் கொண்டுதர ஒரு சக்தியுடையவனுக இருக்கக் கூடாதா? அன்பர்கள் சிந்திக்க வேண்டுகிறேன்!

ஓணகாந்தன் தளியில் பொருள் பெற்ற சுந்தர மூர்த்திகள் திருமாற்பேறு, திருவல்லம் முதலான தலங்

களைத் தரிசித்துக் கொண்டு திருவொற்றியூர் வந்து இறைவனைத் தரிசித்து அங்கேயே தங்கியிருந்தனர்.

பொருளாசையற்ற நாயனுர், பெண்ணுசையும் அற்றவர். அதனுலேயே கோட்புலியாரின் மக்களான சிங்கடியார், வனப்பகையார் என்ற மங்கையரை மக்களாகக் கொண்டனர். எனினும் சிவபெருமானுல் அநிந்திதை கமலினி என்ற இருவரில் கமலினி பரவை நாச்சியரராக வந்தனர். அநிந்திதை திருவொற்றியூரில் சங்கிலியார் என்ற பெயரில் அவதரித்திருந்தனள். நாயனுர் அநிந்திதையான சங்கிலியாரை விரும்பப் போகிருர். சிவபெருமானின் கட்டளையை யார் மீறமுடியும்?

திருச்சிற்றம்பலம்

அலங்கார நாயகன் 30

திருமதி: ஆர். பார்வதி அம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை, நாமக்கல்.

காலையும் மாலையும்

நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் கூறியருளிய மெய்ப் பொருளை உணர்ந்தவர் காலத்தை மாய்த்து காலத்தினல் மாய்க்கப் படாமல் இருப்பார். என்று கூறிய அருணகிரி நாதர் யமனுடைய வேதனையினின்றும் நீங்குவதற்கு மற்ருேர் உபாயம் கூறுகிருர்.

"அழித்துப் பிறக்கவொட்டா அயில்வேலன் கவியை அன்பாய்
எழுத்துப் பிழையற் கற்கின்றி லீர்எறி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூத்தன் விடுங்கயிற்ருல்
கழுத்தில் சுருக்கிட்டிழுக்குமன் ருேகவி கற்கின்றதே"

என்ற பாட்டில் எதிர்முகமாக எம்பெருமான் புகழைச் சொல்லும் தமிழ்க் கவிகளை எழுத்துப் பிழையறக் கற்ருல் கூற்றவனுடைய இன்னலுக்கு ஆளாகாமல் இருக்கலாம். என்பதைப் புலப்படுத்தினர் பிறகு வேலும் மயிலும் துணை யாக இருப்பதால் "மரணப் பிரமாதம் நமக்கு இல்லையாம்" என்ருர். பிறகு யமனையே அறைகூவி "அவிரோத ஞானச் சுடர்வடிவாள் கண்டாயடா என்ருர். அதற்கு அப்பால்" குருநாதன் சொன்ன சீலத்தை மெள்ளத் தெளிந்து அறியார் சிவயோகிகளே காலத்தை வென்றிருப்பர் என்று கூறினர். இப்போது தேவா எனக்குத் தமிழ் தெரியாது

எனக்குக் குருநாதனும் கிடைக்கவில்லை. அப்படியே யாராவது உபதேசம் செய்தாலும் அந்த சீலத்தின்படி ஒழுக எனக்குத் திறமை இல்லை. எனக்கு ஒன்றும் வழிஇல்லையா? என்று கேட்டால் அதற்கு விடைபோலஇருக்கும்பாட்டைச் சொல்கிருர்.

"ஓலையும் தூதரும் கண்டுதிண்
டாடல் ஒழிந்தெனக்குக்
காலையும் மாலையும் முன்னிற்கு
மேகந்த வேள்மருங்கில்
சேலையும் கட்டிய சீராவும்
கையில் சிவந்த செச்சை
மாலையும் சேவல் பதாகையும்
தோகையும் வாகையுமே',

இந்தப் பாட்டின் பொருள் கேள்விபாகவும் விடையாகவும் கற்பனை செய்து பார்க்கலாம்.

கோயிலுக்குப் போய் இருக்கிருயா? ஆண்டவனுக்கு எத்தனையோ விதமான அலங்காரங்களைப் பண்ணுகிருர்களே அவற்றையெல்லாம் பார்த்து இருக்கிருயே? என்ற ஒரு வினவைக் கேட்டார்.

பார்த்தேன் அலங்காரம் அழகாய் இருந்தது. எல்லோரும் கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள். நானும் போட்டுக் கொண்டு கீழே விழுந்து வணங்கி விட்டு வந்தேன்.

கண்ணாலே பார்த்ததைக் கருத்திலே பதித்துக் கொண்டாயா? கருத்திலே எப்படி பதித்துக் கொள்வது?

அருணகிரியார் சொல்கிருர், மனிதன் உலகத்தில் வாழ்கிருன். வாழ்வு முடிந்தவுடன் சாகிருன். வாழ்நாளில் வருகின்ற துன்பங்கள் எல்லாவற்றிலும் மிகமிகப் பெரிய

துன்பம் சாவு. அந்தத் துன்பம் என்றைக்குமே வராமல் இருந்தால் துன்பமே அவனுக்கு அற்றுப் போய்விட்டது எனலாம். துன்பம் இல்லாது போனுல் இன்பம் தலை எடுக்கும். இருட்டு எங்கே இல்லையோ அங்கே ஒளி இருக்கும். துன்பம் தருகின்ற இருட்டாகிய சாவை ஒழித்துவிட்டால் காலஜயம் செய்துவிட்டால் இன்ப ஒளி உண்டாகும். அது தான் இறைவன் திருஉருவத்தை மனதில் பதித்துக் கொள்வதன் பயன் என்ருர்.

அடாடா நீங்கள் சொல்வதே மனத்திற்கு இன்பமாக இருக்கிறது. அந்த யமன் வந்தால் என்ன செய்வான், அவனே நேரில் வருவானு?

அப்பா யமன் நேரே வரமாட்டான், அவன் பெரிய அரசன். அவனுக்குக்கீழ் பல தூதர்கள் இருக்கிருர்கள். அந்தத் தூதர்களைத்தான் அவன் ஏவிவிடுவது வழக்கம். மிகப் பெரியவர்களானுல் அவனே நேரில் வருவான். மார்க்கண்டேயனை இழுத்துப் போக அவனே நேரில் வந்தான். மார்க்கண்டேயன் எம்பெருமானைத் தழுவிக் கொள்ள எம்பெருமானையும் சேர்த்து யமன் பாசக் கயிற்றைப் போட்டு இழுக்க எம்பெருமான் தன்காலாலே யமனை உதைத்துத் தள்ளினுன் என்ற கதையை நீ கேட்டதில்லையா?

ஆமாம் கேட்டிருக்கிறேன்.

மார்க்கண்டேயனை பிடித்துப் போக முதலில் எமதூதர்கள் வந்தார்களாம். ஆனுல் அவர்கள் அவனை அணுக முடியவில்லை, கூற்றுவன் வந்தான் அவனுலும் முடியவில்லை. கூற்றுவன் தூதர்களின் தலைவன். அதைக் கேட்டு எமன் சீற்றம்கொண்டு தானே அவனைக் கொண்டு

வருகிறேன் என்று மீசையை முறுக்கிக் கொண்டு கரிய எருமை வாகனத்தில் புறப்பட்டு வந்தான். திருக்கடவூர் வந்து சேர்ந்தான்.

அங்கே மார்க்கண்டேயன் மீது பாசம் வீசினன், பாசத்திற்கு அகப்படாத ஆண்டவனையும் சேர்த்து பாசம் வீசியமையால் செத்து ஒழிந்தான். மீண்டும் உயிர்ப்பிக்கப் பெற்ருன், எமனுடைய தூதர்கள் வருவார்கள். ஓலையை நீட்டுவார்கள் அதை வாங்கிப் படித்தவர்கள் திரும்ப வந்து அதில் என்ன எழுதியிருந்தது என்று சொன்னது கிடையாது.

எமன் எருமைக்கடா, ஓலை என்பனவெல்லாம் அறிகுறிகள்.

நுட்பமான பொருள்களை நினைவுபடுத்திக் கொள்வதற்காகப் பருப்பொருளான அடையாளங்களை வைத்து வழங்குவது பெரியோர்களின் வழக்கம், மரணத் துன்பத்தை நாம் நினைவு கூர்தற்கு பயங்கரமான எமனையும் பிற பொருள்களையும் அறிகுறிகளாகக் காட்டுகிருர்கள். பருப்பொருளாகச் சொன்னலும் அறிவுடையவர்கள் உள்ளுரையை உணர்ந்துக் கொண்டு விடுவார்கள். நம் நாட்டுப் புராணக் கதைகள் வரலாருகத் தோன்றினலும் நுட்பமான கருத்துக்களை உள்ளுறையாக உடையவை.

நீ இவ்வுலகில் இத்தனை காலம்தான் வாழ்வாய் என்று உன்னைப் படைக்கும் போது நீ செய்திருக்கும் பாவ புண்ணிய வினைகளை எல்லாம் கணக்கிட்டு உன் தலையில் பிரமன் எழுதி அனுப்பிவிட்டான். உன் தலைஎழுத்தின் ஒருபடி அப்போதேஎமனுக்கும் அனுப்பப்பட்டுவிடுகிறது. உன் ஆயுட்காலம் முடியும் போது அந்தப்படியாகிய ஓலையை எடுத்துக் கொண்டு எமதூதன் வருவான், ஒப்பந்

த்தப்படி நீ இவ்வுலகில் வாழ வேண்டிய காலம் முடிந்து விட்டது. இனி என்னுடன் நீ வா! என்று குறிப்பிட்ட எம தூதன் உன்னிடம் ஓலையை நீட்டுவான். அதைப்பார்க்கும் போதே உன்னுடைய கண்கள் பஞ்சடைய ஆரம்பிக்கும். வாய் குழறும், காது அடைத்துக் கொள்ளும்.

ஓலையையும் அதைக் கொண்டுவந்து உன்னிடம் கொடுத்த யமதூதனையும் கண்டு உயிர் உடம்பை விட்டு விட வேண்டுமே என்று திண்டாடுவாய், வேதனைப் படுவாய். ஓலையைக் கண்டவுடனே அச்சம். எதிரே நிற் கின்ற தூதனைக் காணும்போது நடுக்கம், இவற்றுடன் உயிர் ஊசலாடிக் கொண்டு வெளியே போகத்திண்டாடும் இந்த திண்டாட்ட வாதனையை ஒழிக்கலாம்.

"ஓலையும் தூதரும் கண்டு திண்டாடல் ஒழித்து"

என்று அருணகிரியார் சொன்னவுடனே அது எப்படி சுவாமி என் ஆயுள் முடிந்து விட்டது என்பதை அறிவிக் கும் ஓலையையும் என்னுடனே வா என்று அழைக்கின்ற யமதூதரையும் கண்டு உடல் சோர்வு அடைய கண்பஞ்சு அடைய பயத்தினாலே திண்டாடுகின்ற நிலையை ஒழிக்க உண்மையிலே இயலுமா என்று கேட்கிறான்.

அப்பா, நீ இருபத்துநான்கு மணி நேரமும் ஆண்டவனை நினைக்கவேண்டாம். அவன் திருஉருவத்தை நினைப்பதற்கு இரண்டு நேரங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு நேரமும் வழிபட்டால் போதும். அதிலிருந்து இன்பம் உண்டாகும். நாள்தோறும் தேவாரத்திலுள்ள பதிகத்தைப் பாராயணம் பண்ணும் எண்ணம் உடையவர் கள் நேரம் இல்லாவிட்டால் அப்பதிகத்தின் முதல் பாட் டையும், கடைசி பாட்டையும் சொல்வது வழக்கம். அந்த இரண்டையும் பாடினாலேயே நடுவில் இருக்கிற அத்தனை

பாட்டையும் சொன்ன பலன் கிடைக்கும். அதைப் போலவே இருபத்துநான்கு மணி நேரத்தில் காலைஎன்பது ஒரு எல்லை; மாலை என்பது ஒரு எல்லை. பகலில் எங்கும் ஒளி பரவி நிற்கும், இரவில் எங்கும் இருள் சுவிர்திருக்கும், ஒளி இறைவனுக்கு அடையாளம், இருள் கூற்றவனுக்கு அடையாளம் வாழ்க்கையில் ஒளிநிரம்பிய பகல்பிறப்பைப் போலவும், இரவு இறப்பைப் போலவும் உள்ளன.

> "உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
> விழிப்பது போலும் பிறப்பு"

இரவில் உடம்பு தொழிற்படாமல் அடங்கியிருக்கும். இரவு நேரம் போன பிறகு எல்லா உறுப்புக்களும் தொழிற் படுகின்றன. விடியும்போது பிறக்கிருன் உறுப்புக்கள் தொழிற்பட ஆரம்பிக்கின்றன. இரவில் மரிக்கிருன். உறுப் புக்கள் தொழிற்படாமல் அடங்கி விடுகின்றன பிறக்கின்ற இறக்கின்ற காலம் இரண்டுக்கும் எல்லையாக உள்ள போதுகள் காலையும், மாலையும் இந்தஇரண்டு நேரங்களில் இறைவனை நினைந்து வழிபட்டு அவன் திருவுருவத்தை மனத்திரையில் ஓவியமாக தீட்டிக் கொண்டால் இப்போதைக்கு போதும் என்கிருர் அருணகிரியார். காலையும்மாலையும் இறைவனை தரிசித்து வழிபட்டு அவன் திருவுருவத்தை மனதிலே நினைத்துப் பழகினல் இடைப்பட்டக் காலத்திலும் அந்த நினைவு மங்காமல் இருக்கும்.

இயமனுடைய கணக்கனுகிற சித்திரகுப்தன் எழுதித் தந்த ஆயுள் முடியும் கணக்குஓலையை எடுத்துக்கொண்டு எமதூதர் வருவர். அமீனு வாரண்டு என்னும் கோர்ட்டு உத்திரவைக் கொண்டு வருதல் போல,

> "எமனேலை அதுவருகு மளவில் உயிர்அங்கிட்டு"
>
> — திருப்புகழ்

அவ்வாறு எமன் ஓலையைக் கொண்டு தூதர் வந்து நடுக்கத்தைச் செய்யும் மரண பயத்தை அறவே நீக்கி அருணகிரியாருக்குக் காலையும் மாலையும் கந்தப்பெருமானுடைய கச்சையும், உடைவாளும் வெட்சி மாலையும் சேவற் கொடியும் மயிலும் முன்னே தோன்ற, நின்று அருள் செய்யும் என்னே அவருடைய மாண்பு. அறுமுகன் திருவருளை அவரைப் போன்று பெற்றார் யாருளர்,

"கந்தவேள் மருங்கிற் சேலையும் கட்டிய
சீராவும் கையில் சிவந்த செச்சை
மாலையும் சேவல் பதாகையும் தோகையும் வாகையுமே"

இறைவனுடைய உருவத்தில் தோன்றுவனவற்றை வரிசையாக அடுக்குகிறார். கந்தன் என்ற சொல்லிற்கு தன் இணையற்ற ஆற்றலினால் எல்லா உலகங்களிலும் உள்ள பகைவர்களைச் வற்றச் செய்கின்றவன் என்று பொருள். வேள் என்ற பெயருடையோர் இருவர். ஒருவன் செவ்வேள், மற்றொருவன் கருவேள். முருகன் செவ்வேள். இங்கே சொன்ன வேள் கந்தவேள். மருங்கிற் சேலை எம்பிரான் திருவரையில் உடுத்தியுள்ள பீதாம்பரத்தின் மீது கட்டும் கச்சை. முருகநாயகன் வீரவீர வீராதிப் வீரப்பெருமாள் ஆதலால் கச்சை கட்டிக் கொண்டிருக்கிறார். சீரா என்பதற்குக் கவசம் என்ற பொருளும் உண்டு எனினும் இங்கு உடைவாள் என்ற பொருளில் வந்துள்ளது, சீரா = சிறிய கூரிய உடைவாள்.

"சூந்தூளாய் வீழச் சிறுதாரைச்
சீராவாலே வாளாலே வேலாலே சேதித்திடும் வீரா"

— திருப்புகழ்.

"அரையிற் கட்டும் சீராவும்" அலங்காரம்—81

நிராசரக் குலத்தை இப்படி
சீராவினால்துத்தறுத் தொதுக்கிய பெருமாளே"

— திருப்புகழ்

செச்சை = வெட்சி, வெட்சிமாலை சிறந்த வீரர்கள் தரிப்பது அது முருகப் பெருமானுக்கு உகந்தது.

"...........................வெட்சித் தண்டைக்
காலென்கிலை மனமே எங்ஙனே முக்தி காண்பதுவே"

— அலங்காரம்.

"கொற்றவா உற்பவச் செச்சை மாலைப்புயக்
கொச்சைவாழ் முத்தமிழ்ப் பெருமாளே"
"முச்சாலிச்சாத்தாள் வெற்பாள்
முத்தர் வெட்சிப் புயவளே"

— திருப்புகழ்.

சேவற்பாதகை = வெற்றியைத் தெரிவித்து கூவும் சேவல்.

"வாளகிரியைத் தனது தாளிலிடியப் பொருது
வாகைபுனே குக்குட பதாகைக் காரனும்"

— வகுப்பு

தோகை என்பது இறகுக்குப் பெயர். அது சினையாகு பெயராய் மயிலை உணர்த்திற்று. முருகன் இடையில் கட்டிய சேலையையும், சீராவையும் கையில் அணிந்துள்ள செச்சை மாலையையும், சேவல பதாகையையும், தோகையையும், வாகையையும் கண்டு. இன்பப் பூரிப்பு அடைகிருர்கள் பக்தர்கள்.

ஓலையும் தூதரும் கண்டுதிண்
டாடல் ஒழித்து எனக்குக்
காலையும் மாலையும் முன்நிற்கு
மே, கந்த வேள்மருங்கிற்
சேலையும் கட்டிய சீராவும்
கையில் சிவந்த செச்சை
மாலையும் சேவல் பதாகையும்
தோகையும் வாகையுமே.

(தொடரும்)

அலங்கார நாயகன் 31

புலவர்: திருமதி, ஆர். பார்வதி அம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை, நாமக்கல்.

வேலே விளங்கு கையான்

எல்லோருக்கும் இல்லாத அடையாளம் முருகப் பெருமானிடம் ஒன்று இருக்கிறது. அவன் வெற்றிவேல் முருகன். எம்பெருமானின் திருக்கையில்வேல் இருப்பதால் அவன் பெருமை உயரவில்லை. அவனுல் வேல் பெருமை அடைகிறது. எம்பெருமான் கையில் இல்லாமல் வேறு ஒருவருடைய கையில் அது இருந்தால் அதற்கு அவ்வளவு பெருமை உண்டா? தனக்கு அடையாளமாக அவன் கையிலே வேலைக் தாங்கிக் கொண்டு நிற்கிருன். வேல் அவனுக்கு அடையாளம் மாத்திரம் அல்ல. அகண்டமாக இருக்கிற புறவெளியைக் காணச் செய்வதற்கு வேண்டிய ஞானத்தின் அடையாளமாக அதை அவன் வைத்திருக்கிருன். "வேலே விளங்கு கையான்" ஆண்டவன் திருக்கரத்திலே இருப்பதனலே அந்த வேல் விளக்கம் பெற்று இருக்கிறது. யாருடைய கையில் சேர்ந்தால் எல்லாப் பொருளும் விளக்கம் பெறுமோ அந்தத் திருக்கரத்திலே அது இருப்பதனல் அது விளங்குகிறது. "செய்பந் தாரிரில் வீழ்ந்திறைஞ்சி"

பக்தர்கள் பற்றிக் கொள்வதற்காக சிவந்திருக்கும்தன் இரண்டு பாதங்களையும் சேர்த்து வைத்துக் கொண்டு நிற்கிருன் அவன். அவை செந்தாமரை போன்ற திருவடிகள், "செய்யதாள்" செய்ய என்பதுசெம்மையான என்று பொருள்படும். எம்பெருமான் திருவடி நிறைவு பெற்றது நேர்மையானது, குணம் நிறைந்தது. எல்லாவித மான நன்மைகளும் நிரம்பியது. அன்பர்களுக்கு அருள் செய்ய நின்ற இடத்தில் நின்ற இடத்தில் நிற்காமல் ஒடுகின்ருன். தன்னை நினைக்கின்ற ஒவ்வொருவருடைய வன் மனக்கருங்கற் பாறையிலும் நடமாடி அவன் பாதம் சிவந்து கிடக்கிறது. அதனுல் செய்ய தாள் உடையவனுக இருக்கிருன்.

> "கோளில் பொறியியல் குணமிலவே எண்குணத்தான்
> தாளை வணங்காத் தலை"

என்கிருர் வள்ளுவர். இறைவனைப் பார்த்து அவன் தாளைத் தலையால் வணங்க வேண்டும். தாளினில் தலைவீழ்ந்து வணங்க வேண்டுமானுல் அடியற்ற மரப் போலக் கீழே வீழ்ந்து வணங்க வேண்டும். என்றைக்கோ ஒருநாள் இந்த உடம்பைக் காலன் நிச்சயமாக வந்து வெட்டிச் சாய்க்கப் போகிருன். அதற்குள் நாமே இறைவனது திரு வடியை ஒட்டிச் சாய்ந்து விட்டால் காலனுக்கு வேலை இல்லை. எம்பெருமானே எல்லாம் என் செயலாலே நடக் கிறது என்று எண்ணி இறுமாந்திருந்தேன், எனக்கு ஒரு விதமான செயலும் இல்லை. எனச் செயலற்ற மரமாக அவன் திருவடிகளில் வீழ்ந்து விட்டால் காலன் வெட்டிச் சாய்க்க வரமாட்டான்,

நம்மிடமுள்ள அகங்காரம், மமகாரம் ஆகிய இரண்டும் அடியோடு எப்போது போகின்றனவோ அப்போது இறைவன திருவருளுக்குப் பாத்திரம் ஆவோம். அகங்

காரம், மமகாரம் ஆகிய இரண்டையும் அழிக்க உதவுவது நமஸ்காரம். எம்பெருமானுடைய செய்யத் தாளினில் அடியற்ற மரம் போல் வீழ்ந்து இறைஞ்சினுல் சரீர அபிமானம் போய்விடுகிறது. இந்தக் காலத்தில் முதலில் சட்டை அபிமானம் போகும். சட்டையைக் கழற்றி விட்டுப் போய் விழும்போது சரீரஅபிமானம் போகும். பணிவு, அறிமுகம், உடற்பயிற்சி உடம்பின் மீது கொண்ட பற்று போதல் ஆகிய இவ்வளவும் நமஸ்காரம் செய்வதன் மூலம் வருகின்றன. வாழ்வில் துன்பம் வருகின்ற சமயங்களில் நாம் நிமிர்ந்து வாழ வேண்டுமானுல் இறைவனுடைய சந்நிதானத்தில் வணங்கி வாழ வேண்டும். நிமிர்ந்துள்ள வில் வளைந்தால்தான் அம்பு செல்லுகிறது. வில்லை வளைக்கும் கயிற்றுக்கு நாண் என்பது பெயர். நாணினுல் வில் வளைகிறது. அதைப் போலவே நாமும் இறைவனுடைய சந்நிதானத்தில் ஆண்டவனே எனக்குஎல்லாம் தெரியும். என்று இறுமாந்து நிமிர்ந்து நின்றேனே. எனக்கு ஒன்றும் தெரியாது. எனக்கு எந்தவிதமான சக்தியும் செயலும் இல்லை, என எண்ணி நாணினுல் உடல் வளையும். இறைவனுக்கு முன்னே நாணி வளையும் போது மற்றவர்களுக்கு முன்னே நிமிர்ந்து செல்லும்நிலை உண்டாகும். இறைவனுக்கு முன்னே நாமே நம் நிலையை உணர்ந்து நாணி வணங்கி விட்டால் உயர்ந்தோரின் பழிக்கு அஞ்சி நாணித் தலைகுனிய வேண்டி வராது. நம் நாட்டுப் பெரியோர்கள் ஆண்டவன் திருவடிகளிலே வீழ்ந்து வீழ்ந்து நைந்து நைந்து இறைஞ்சி வாழ்ந்தார்கள். அருணகிரியார் அந்த முதலிலே சொல்லுகிறர். இறைவனுடைய செய்யத் தாளினில்வீழ்ந்து இறைஞ்சி அகங்காரம் மமகாரம்போய்க் குழைந்து நின்ருல் என்ன ஆகும். "மாலே கொள"

மால் என்பது காதல், மயக்கம், இன்னது என்று தெரியாதநிலை என்று கொள்ளலாம். மிகுதியாகத் துன்பம்

வரும் போதும் இன்பம் வரும்போதும் ஒன்று தெரியாத தோர் நிலேவரும். அதையே மயக்கம் எனலாம். அதைப் போன்ற ஒருநிலே இறைவன் பாதத்திலே வீழ்ந்து இறைஞ்சி குழைந்து நிற்கும் போதும்வரும். இதுவரை யிலும் ஆண்டவனது வேல், கை, கால் என்று பார்த்து வந்தநிலே போய் கொஞ்சும் முகம் மாறி ஒளிவிஞ்சும் முக மாய்த் தோன்ற அதைப் பார்த்து அப்படியே பிரமித்து வியப்பு எய்தி தன்னே மறந்து நிற்கும் நிலே உண்டாகும். அதுதான் மால் கொள்ளும் நிலே, "இங்ஙள் காண்பதல்லால்"

ஒல மறைகளறைகின்ற ஒருவனும், மறைகளும்கடந்த தோர் தலேவனும் ஆகிய முருகக் கடவுளே அன்பு நெறியி னுலேயே எளிதில் அடையாளம். அன்பின்றி வெற்றுக் கிரியைகளாலும் திரிகரணங்களால் செய்யும் தொழில்க ளாலும் அடைய முடியாது.

"என்பே விறகா இறைச்சி யறுத்திட்டுப்
பொன் போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போடுருகி அகங்குழைவார்க் கன்றி
என்போன் மணியினே யெய்த வொண்ணுதே [திருமூலர்]

நெக்கு நெக்கு நினேபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னூர்ச்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவுநீருங் கண்டு
நக்கு நிற்ப ரவர்தம்மை நாணியே. [அப்பர்]

இறைவனேப்பற்றி அடையாளம் சொல்கின்ற நிலே இது வரைக்குந்தான், இறைவனது திருவுருவத்தைக் காணு கின்றநிலே இதோடு முடிந்து விடுகின்றது. எம்பெருமான் திருவடியில் வீழ்ந்து இறைஞ்சுகின்ற நிலேவரையில் இருப்

பது அது, நெருங்கி நெருங்கி அவன் அடையாளங்களை ஒவ்வொன்றாக பார்த்து வந்து அவன் திருவடியில் வீழ்ந் தாகி விட்டது. உருவம் மறைந்து ஒளி விஞ்சும் தோற்றம் உண்டாயிற்று, அதைப் பார்த்த ஆனந்த மயமான காதலில் ஒருவித பிரமிப்பு அதிசயநிலை வந்துவிட்டது. இதுவரையில் அருணகிரியார் முருகன் கையில் உள்ள வேலைச் சொன்னார். வேல் விளங்கும் கையைச் சொன்னார் கையான் செய்யத் தாளினைச் சொன்னார். செய்யத் தாளி னில் வீழச் சொன்னார். வீழ்ந்த மனம் குழைந்து இறைஞ் சச் சொன்னார். இறைஞ்சி மால் கொளச் சொன்னார், அதற்குப் பிறகு எம்பெருமானை எப்படிக் காண்பது என் பதைக் சொல்கிறார். இவ்வாறு காண்பதைத் தவிர வேறு என்ன நான் சொல்ல முடியும்? என்கிறார். உணவு கிடைக்கும் இடம் தெரிந்து கொண்டாகி விட்டது அதன் சுவையை உண்டால்தானே தெரிந்து கொள்ள முடியும் என்கிறார்.

"மன வாக்குச் செய
லாலே அடைதற் கரிதாய்
அருவுரு வாகிஒன்று
போலே இருக்கும் பொருளைஎவ்
வாறு புகல்வ துவே"

அருவுமாகுவன் உருவமுமாகுவன் அருவும் உருவும் அற்றதோர் தன்மையும் ஆகுவன். என்ற கந்தபுராண வசனப்படி மனோதீதனாக உள்ள குமாரக் கடவுளை மன தால் நினைக்கவும் வாக்கால் பேசவும் காயத்தால் அணு கவும் முடியாது. கரணம் கடந்த கடவுள் "வாய் விட்டுப் பேசொணாதது" திருப்புகழ், அந்த இன்ப அனுபவத்தை விளக்க முடியாது. மனவாக்குச் செயலாலேஅடைவதற்கு

அரியவன் அவன். மூன்று கரணங்களால் மனிதன் எல்லாவற்றையும் அறிகிருன். இந்த மூன்று கரணங்களுக்கும் உட்பட்ட பொருளாக இருந்தால் அவனை அடைந்து அறிவிக்க முடியும். கரணங்களின் நுகர்ச்சிக்கும் அப்பாற்பட்டவனுக அவன் இருக்கும் போது அவனை எப்படிச் சொல்வது, மனத்தினுலே அடைவதற்கும் வாக்கினுலே அடைவதற்கும் செயலாலே அடைவதற்கும் அரியதாய் இருக்கும் பொருள் அது. உருவும் எதுவும் இல்லாதது. அதுவே உருவமானது. "ஒன்று போல இருக்கும் பொருள்"

இறைவன் என்றும் ஒரு படித்தாய் இருக்கின்றவன் போக்கும், வரவும், வளர்வும், தேய்வும், இறப்பும், பிறப்பும், விருப்பும், வெறுப்பும், இன்பமும், துன்பமும் இன்றியுள்ள இயற்கை நிலையுடையவன். இன்று ஒருவிதம் நாளை ஒருவிதம் என்ற மாறுதல் இன்றி ஒருபடித்தாக ஒன்று போல இருக்கும் பொருள் அது. மனவாக்குச் செயலுக்கு அப்பாற்பட்டதை வாக்குக்கு உட்படுத்த இயலாது. அதனை எவ்வாறு புகழ்வது என்கிருர் அருணை முனிவர்.

',மைப்படிந்த கண்ணுளுந் தானுங்கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னினல்லான்
ஒப்புடைய னல்லன் ஒருவனல்லன்
ஒருரனல்லன் ஒருவமனில்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும்
அவனருனே கண்ணுகக் காணினலவால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணுதே',

[அப்பர்]

"அவவா றறிவா ரறிகின்ற தலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே"

— பூதி.

நாம் இருக்கும் பிரபஞ்சச் சேற்றிலிருந்து விடுபட்டு அகண்ட சொரூபமாக நிலவும் ஆண்டவனை அடைவதற்குரிய பாலத்தை அருணகிரியார் போட்டுக் கொடுத்து விட்டார், அந்தப் பாலம் என்ன?

எம்பெருமான் திருக்கரத்தில் இருந்து அஞ்ஞான இருளைப் போக்கும் ஞான வேலைப் பார்ப்பது வேல் விளங்கும். கையைப் பார்ப்பது கையான் செய்யத்தாளைப் பார்ப்பது, தாளினில்வீழ்வது. வீழ்ந்து இறைஞ்சுவது.இறைஞ்சி மால் கொள்வது, அப்புறம் அருணகிரியாரைப் போலவே நாமும் காண வேண்டியதுதான், ஒன்றுபோல மாறுபாடு இல்லாமல் இருக்கும் பொருளாக அது இருப்பதால், அவருக்கு ஏற்பட்ட இன்ப அனுபவமே நமக்கும்ஏற்படும். பல ஆண்டுகளுக்கு முன் அவர் பெற்ற அனுபவம் அது இன்று அதே அனுபவம் நமக்குக் கிடைக்குமா? என்ற ஐயமே வேண்டாம். என்றும் மாறுமல் ஒன்று போல இருக்கும் பொருளின் அனுபவம் ஆதலால் அது என்றும் ஒரே மாதிரி இருக்கும்.

வேலே விளங்குகை யான்செய்ய
தாளினில் வீழ்ந்திறைஞ்கி
மாலே கொளஇங்ஙண் காண்பதால்
லால்மன வாக்குச்செய
லாலே அடைதற் கரிதாய்
அருவுரு வாகி ஒன்று
போலே இருக்கும் பொருளைஎவ்
வாறு புகல்வதுவே'

(தொடரும்)

'நால்வர்நான்மணி மாலையி'ல் பொருக்குமணிகள் — சில

உயர்திரு, T. H. விவேகானந்தம் பிள்ளை அவர்கள்,
சென்னை.

———

திருஞானசம்பந்தர்:-

"தன்பாட்டுக் கிணையில்லாச் சம்பந்தன்ருள் போற்றி
இன்பாட்டுத் திருப்பொதுவி லிபற்றுமடியிணை போற்றி
என்பாட்டுக் கிருந்தாலு மினபர்ட்டுக் கொண்டருளி
அன்பாட்டு மெட்டுகுடிய மாலேலனருள் போற்றி"

எட்டுகுடி முருகன் பிள்ளைத்தமிழ், கவியரசு நடேசக் கவுண்டர். திருஞானசம்பந்த மூர்த்தியே! அம்மையே அப்பாவென்று அழைத்தழுதல் கண்டு, திருமுலை சுரந்து, சிவபிரான் பணித்தவாறு அப்பாலடிசிலை பொன் வள்ளத்திற் சுரிந்து ஊட்டியருளிய அன்னையோ; தாமும் குலச்சிறை நாயனுநம் போலத் தங்கணவர் முதலிய தொடர்புடையோர் சமண் சமயப்படுகுழி யினீங்கிச் சைவ சமயிகாளாய்யும் தனை எவக்கும் அன்புடையரானது. அந்நாடு முற்றும் உய்ய வேண்டும் என்னும்

அன்பின் முதிர்ச்சியால் கொங்கை சுரந்த அருட் கோமகளோ (மங்கையர்கரசியாரோ) யார் உயர்ந்தோர் இங்கு, சொல் எனக்கு.

சலந்தரன், திருமாலாதியரைப் பன்முறை வென்ற செருக்கால் சிவபெருமானையும் வெல்ல, திருக்கைலை னெய்தி, ஆங்குப் பெருமான் திருவடியால் நிலத்திற் கீறிய திகிரியின் மடிந்துழி, அத்திருமால் அவனுடலிற் புகுந்து, அவன் மனைவியாகிய விருந்தையை அனுபவத்திருக்க, அவள் அஃதுணர்ந்து, கற்பழிந்தமைக் தக்கவன்று, கனலின் மூழ்கலும் விரகமிக்கு அவளென்பிற் புரண்டாரா கலின் 'மால்' எனப் பெயர் பெற்ருர் போலும். புரளக் கண்ட பிரமனுதியர், அம்பிகையளித் வித்தை அச்சுடலை யினிட்டு அமுதம் பெய்ய, அதிற்ருேன்றிய துவளம் கன் னிகையாகக் காணப் பெற்றமையன்றி, தாம் தாம் காதலித்த அவளென்பு அங்ஙனம் ஆக்கப் பெருமை உணர்க. ஆனுல் ஞானசம்பந்த மூர்த்தியோ அமிர்த கலசமேயென்னும் அமைதி வாய்ந்த தனங்களையுடைய பூங்கொம்பு போலும் ஓர் அரிய பெண்ணுக செய்தது போல (பூம்பாவை போல்) திருமால் செய்து கொண்டா ரில்லை. அங்ஙனம் செய்து கொள்ளாமைக்கு காரணம் யாது? என வினுவுகிருர். சிவப்பிரகாச சுவாமிகள். சுடுகாட்டுளாடுவானை, அறிவிக்கும் திறமை வேதங்களுக் கும் இல்லை. அவனை சுட்டிப் புகழ்ந்த பெருமை ஞான சம்பந்தருக்கு உண்டு.

"தோடுடைய செவியன் விடையேறியோர்து வெண்மதிசூடி, காடுடைய சுடலைப் பொடிபூசி.........பெம்மானிவன்றே" காண்க.

சிரபுரத்து அவதரித்த முத்தமிழ் விரகரருளிய திருப் பாட்டுகள், பண்புமிக்க ஆண் பனைகளுக்கு பழமாகும். விடத்திற்கு மயிலாகும், பிணிக்கு மருந்தாகும், உருச் சிதைந்துரிந்த என்பிற்கு உயிராகும். மெய்யன்போடு பாராயணஞ் செய்யின் அவர்கட்கு வேண்டும் அனைத்தும் சித்திக்கச் செய்யும். பிரபுலிங்கலீலை, வசவஸ்துதி, இங்கு நோக்கத் தகககது.

"வெள்ளவேணிப் பெருந்தகைக்கி யாஞ்செய்யடிமை மெய்யாக,
கள்ளவேடம் புனைந்திநந்த கள்வரெல்லாம் களங்கமறு முள்ளமோடு
மெய்யடியாராக வுள்ளத்துள் ளுமருள், வள்ளலாகும்
வசவேசன் மலர்த்தாடலையால் வணங்குவாம்"

எவரும் கைக்கொள்வான் முத்தியை ஈந்து, கூற்றை பிடர் பிடித்து தள்ளும் திருஞானசம்பந்தமூர்த்தியே! கழக் கூட்டத்தில் இவரைத் துணிந்த அமணர்கள், வைகை நதிப் பெருக்கிலிட்ட "வாழ்க அந்தணர்" என்னும் திருப்பாசுரத் திருப்பதிகம் வரைந்த ஏடு, எதிரேறிசெல்லக் கண்டு தம்பக்கம் குறைந்ததென்று அழத்தக்கவரே அமணர்கள் (நம் வீட்டுப் பேச்சு: 'வெள்ளம் இடும் ஏடுஏற பால் குறைந்த தென்றமுவரே' —வீட்டில் பால் காய்ச்சும் போது, வெள்ளம் இட்டுக்கொண்டே போனால், ஏடுதான் ஏறும்—பால் குறையும்.

திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிக மெழுதிய திருவேடு, அழல்வீழ்ந்து கரிஆய்விடாமல் பசுமையாய் விளங்கியது. பரமருடைய பரத்துவ நிலையை 'கரிஆய் மொழியும்' தானே சான்றாக நின்று சாற்றும் சான்று "போகமார்ந்த பூண்டு முலையாள்" திருநள்ளாறு பதிகம்.

பொருளும் அதனால் எய்தும் புண்ணியமும், அப் புண்ணியப் பயனாகிய இம்மை மறுமையின் பங்களும், கல்வி நல்லாதரவு ஞானங்கள் எல்லாம் திருஞான சம்பந்தன் சேவடியே! இத்தகைய ஒரு ஞானசம்பந் தத்தை எய்தி, வல்லார் பிறப்பு அறுப்பா.

"சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினி லோங்கில் ஞானம்
உவமையிலாக்கலை ஞானமுணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தாரந் நிலையில்"

— பெரியபுராணம்.

(தொடரும்)



நால்வர் நான்மணி மாலையில் பொருக்கு மணிகள் சில

உயர்திரு, T. H. விவேகானந்தம் பிள்ளை அவர்கள்
சென்னை

மாணிக்கவாசகர்:-

தேனினுமினிய செந்தமிழ் பாடல்களை இயற்றிய அருட்கவி. துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள். நால்வகை மணிகளும் ஒன்றன்பின் ஒன்ருக முறையே பொருந்தி விளங்கக் கோவையாகக் கோக்கப் பெற்ற தொரு மணிமாலை "நான்மணி மாலை" எனப்படும்.

மூன்று நேத்திரங்களையுடைய முதற்கடவுளின், திரு வாக்கெனச் சிறப்பித்துரைக்கும் வேதத்தைப் பலமுறை ஓதினும், அதுகேட்டு, கண்களினின்றும் நீரைப்பொழிந்து, மனம் கரைந்துருகி, நிற்கின்ற வரையாம் கண்டிலம். ஆனல் திருவாசகத்தை ஒருமுறை ஓதினும், கருங்கல்

மனமும் கரைந்து, தொடும் மணற்கேணி சுரக்குமாறு போலக் கண்கள் நீர்பெருகிச் சுற்றும்பாய, தேகத்திலுள்ள மயிர்கள் சிலிர்க்க, நடுக்கம் அடைந்து (ஆநந்த நடுக்கம்) ஆ கார் இலர். வேதம் சிறந்ததா. திருவாதவூர் வாசகத் தேன் சிறந்ததா? உலகினரே சொல்லுங்கள்!

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதன் அருளிய திருவாசகமே திருவாசகம். அதற்குப் பொருள். முதல்வியை வாம பாகத்திலுடைய தவ சொருப ராகிய சிவபெருமானே. திருவாசகத்துக்குப் பொருள் சொல்ல அனைவரும் வேண்ட, செப்புவாமெனச் செம் பொனம் பலத்தையடைந்து, இவரே பொருளென, இறை வரை சுட்டிக்காட்டி எவரும் குதூகளிக்க இறைவனுடன் இரண்டறக் கலந்தார்.

பண்டைநாள், திருத்தொண்டர் பலராயினும், மாணிக்கவாசகர் பாடுதற்றிருத் கொண்டை, தேவரீர் பரிக்கும் நிமித்தம், மதுரை மாநகரில் குதிரை மாறியும், திருமுடி மீது மண்செறிந்த கூடையை வலிந்தெடுத்தும், நீறுஎழில் மேனியில் பிரம்படிபட்டும், நின்னைத் தொண்டன் எனக் கொண்டனன். மாணிக்கவாசகர் ஒரு மாமழை. திருவாசகம், கருணைக் கடல். உலகு உவப்ப பொழிந்த திருவாசகம் என்னும் பெருவெள்ளஞ் சென்று

ஓதுவார் மனம் எனும் ஒண் குளம் புகுந்து (உள்ளமெனும் எழிலமைந்த, ஏரியினுள்ளே நிரம்பி), நாஎனும் மதகில் வெளிப்பட்டு, கேட்போர் செவி எனும் மடையில் வழுவு தலின்றிச் சென்று, உளம் என்னும் நிலத்தில் பாய, அன் பென்னும் வித்திலே, சிவம் எனும்மென் முளைத் தோன்றி, கருணை மலர்ந்து, முத்தியெனும் உண்மைப் பயனை உதவா நிற்கும்:

திருப்பெருந்துறை என்னும்தலத்திலே மிக்கமேன்மை யுடைய குருந்த மரத்தின் விரிந்த நிழலில், திருத்தமுற்ற வேதமுடிவிற் செறிந்த சைவ சித்தாந்தப் பொருள் முற்றும், கொள்ளை சொல்லும், சிவபெருமான் பக்கற் பெற்ற திருவாதவூரண்ணலே, உம்முடைய திருத் தொண்டர்களின் மெய்யன்பு எனக்கு உரித்தாக வேண்டும் அருள் செய்வீர்: இதில் ஆவல் மிகுந்தேன் சிவனே! என்று புலம்பி, அழுகிறார், (அவர் ஆர்வத்தில் பல கோடியில் ஒரு துளிகூட நமக்கு கிடையாது).

"பெருந்துறையில் மேய பெருங் கருணையாளன்;
வருந்துயரந் தீர்க்கும் மருந்து"

திங்கள் சடையான், தெய்வநாயகன், வேத முதலிய கலைகளுள் ஒன்றும் உணரார், அவன்கைகளோ முறிபடும் கைகள். கன்களோ, ஒன்று காலையில் தோன்றும், மற் றொன்று மாலையில் விளங்கும்: பழிப்பிணையுடைய பிறி தொன்று விழித்த வழி அப்பார்வையிற்பட்டவை நீருகும், ஆயினும் நீ புகழ்ந் திசைத்த, பழுதற்ற திருப்பாடல்களை, இகழ்ச்சி அறியா, என்பு அணிவானே எழுதினன்என்ருல் அவர் புகழ்ச்சிக்கண் அதிகாதலர் போலும்.

மாணிக்கவாசகர் புகன்ற மணிவாசகம் பொற் பாத்திரத்தைப் போலும், அந்தணர் ஓதும் நான்கு வேதங்களும், மட்பாத்திரங்களை நிகர்க்கும். மதுரம் வாசகம் ஓதின் உறுபயன் முத்தியே. வேதம் ஓதின் மெய்ப்பயன் அறமே. உபநிஷத்துக்களின் சாரமே திருவாசக மாகலின், இதனையோதின் முத்தி நிச்சயமே.

சிவன் தனது அடியவனாகிய திருவாதவூரடிகளை நீக்கமின்றி உள்ளத்தால் நேசித்து பிணிக்க வல்லார்க்கு, தானே முற்பட்டு முத்திதருகுவன்.

பூ எனப்படுவது, திருமகள் வதியும் செந்தாமரை மலரே, அதுபோல பா எனப்படுவது உன் பாட்டு (தேவரீரருளிய திருவாசகம், திருக்கோவையார்) "மூலப் பண்டாரம் வழங்குகின்றான்: வந்துமுந்து மினே"

(தொடரும்)



உ

காஞ்சிபுரம் தொண்டை மண்டலாதீன

229-ஆம் குருமகா சந்நிதானம்

சீல ஸ்ரீ

ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

29—9—77 அன்று சமாதி நிலையுற்ற போது

காஞ்சிபுரம் இந்து தமிழ்க் கவிஞர் மன்றத்தினர்

பக்தியுடன் சுவாமிகளின் திருவடிகளில் சமர்ப்பித்த

வழிபாட்டுப் பாமாலை

கட்டளைக்கலித்துறை

1. மெய்கண்ட நாதன் அருளுப தேசத்தை மேதினியில்
பொய்கண்ட வெம்மைப் புழுதி யடங்கப் புகழுடனே
பெய்திட்ட ஞானப் பிரகாச மென்னும் பெருமுகிலே:
கைவிட்ட தேனும் கதியாவ துன்றன் கழலிணையே.

2. இணையாரு மின்றி எழிலாரு மின்பத் தமிழ்க் கடலைத்
தனியாக நின்று தரமாக் கடைந்து தமிழமுதை
நனியார வூட்டும் நலமார்ந்த ஞான குருமணியே;
இனியா ரெமக்கிங் கினியார் விடுத்தெமை ஏகினையே!

3. ஏர்கொண்ட பண்பின் இலங்கா புரியும் எழிற்றமிழின்
சீர்கொண்ட தெய்வச் சிறப்போங்கு மெல்லாச்செழும் பதியும்
பேர்கொண்டு நின்றிட பீடத் திருந்த பெருஞ்சுடரே!
யார்கொண்டு தாங்குவார் நீகொண்ட சீரை நயந்தினியே,

4 நயமே விளையும் நலந்தோய்ந்த நாவும், நமன் விடுக்கும்
பயமே அகற்றும் பதிஞான வாக்கும், பலரும்வாழத்
தயவே நிறைந்த தமிழ்த்தெய்வ நோக்கும், தனித்தஞான
மயமே அமைந்த மலர்த்தாளும் என்றும் மறக்கலாமே!

பா: செஞ்சொற் கவிமணி,

புலவர் மா. வேங்கடேசன் M. A.

காஞ்சிபுரம் —1 [பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி]